வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 797/ஆ3/2023 நாள்: 24.09.2023

-----

| | |
|---|---|
| பொருள்: | பள்ளிக்கல்வி – தொழிற்கல்வி – சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்ட பல்வேறு வழக்குகளில் பெறப்பட்ட தீர்ப்பாணைகளை செயல்படுத்திட வேண்டி 01.04.2003க்கு முன்னர் பணிவரன்முறை செய்யப்பட்ட அரசு/அரசுஉதவி பெறும்/ நகராட்சி/ மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும்/ ஓய்வு பெற்ற தொழிற்கல்வி ஆசிரியர்களில் 06.04.2018க்குப் பிறகு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்ற/வழக்கு நிலுவையில் உள்ள / **வழக்கு தொடராத தொழிற்கல்வி ஆசிரியர்களின்** பகுதி நேர பணிக்காலத்தில் 50 விழுக்காட்டை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் – ஏற்கனவே ஆணை வெளியிடப்பட்டது – விடுபட்ட நபர்கள் இருப்பின் உடன் விவரம் அனுப்பக் கோருதல் – தொடர்பாக. |
| பார்வை: | 1. அரசாணை (நிலை) எண். 194, பள்ளிக்கல்வி (பக7(1))த்துறை, நாள். 12.09.2018.<br>2. அரசாணை (நிலை) எண். 127, பள்ளிக்கல்வி (பக7(1))த்துறை, நாள். 12.07.2023.<br>3. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணைஇயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறைகள், ந.க.எண். 53837/வி1/இ1/2016, நாள். 15.09.2023.<br>4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள் 19.09.2023 |

-----

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு / அரசுஉதவி பெறும் / நகராட்சி / மேல்நிலைப்பள்ளிகளில் 01.04.2003க்கு முன்னர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணிபுரியும் / ஓய்வு பெற்ற தொழிற்கல்வி ஆசிரியர்களில் 06.04.2018க்குப் பிறகு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்ற/வழக்கு நிலுவையில் உள்ள / வழக்கு தொடராத தொழிற்கல்வி ஆசிரியர்களின் பகுதி நேர பணிக்காலத்தில் 50 விழுக்காட்டை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளக் கோரி தொடரப்பட்ட வழக்குகளின் அடிப்படையில் பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் பார்வை (2)இல் காணும் அரசாணையின் படி தகுதியான ஆசிரியர்களின் பெயர்கள் ஏற்கனவே சார்ந்த பள்ளிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 01.04.2003க்கு முன்னர் பணிவரன்முறை செய்யப்பட்ட தற்போது பணிபுரியும் / ஓய்வு பெற்ற தொழிற்கல்வி ஆசிரியர்களில் 06.04.2018க்குப் பிறகு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்ற/வழக்கு நிலுவையில் உள்ள / **வழக்கு தொடராத தொழிற்கல்வி ஆசிரியர்களின்** பகுதி நேர பணிக்காலத்தில் 50 விழுக்காட்டை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளக் கோரி தொடரப்பட்ட வழக்குகளின் அடிப்படையில் எவருடைய பெயரேனும் விடுபட்டிருப்பின் அவருடைய விவரங்களை இணைப்பு 2இல் உள்ள படிவத்தில் பூர்த்தி செய்து (வழக்கு தொடுத்த ஆசிரியர்களின் Affidavit, Counter Affidavit, Judgement Copy, Contempt Affidavit Copy) உரிய விவரங்களுடன் இரு நகல்களில் இவ்வலுவலக ஆ3 பிரிவில் 19.09.2023 அன்று மாலை 05.00 மணிக்குள் நேரில் ஒப்படைக்குமாறும் அனைத்து வகை மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தும் ஆனால் இணைப்பில் உள்ள பள்ளிகளில் இருந்து விவரங்கள் பெறப்படாதது வருந்தத்தக்க செயலாகும்.எனவே நாளை 25.09.2023 காலை 11.00 மணிக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ3 பிரிவில் தனிநபர் மூலம் நேரில் ஒப்படைக்க மீள அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் எவருடைய பெயரும் விடுபடவில்லை என்பதற்கான சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரின் சான்று இணைக்கப்படவேண்டும். மேலும் இப்பொருள் சார்பான விவரங்கள் தங்கள் பள்ளிகளில் இல்லையெனில் இன்மை அறிக்கை தவறாது அனுப்புதல் வேண்டும்.

இணைப்பு – பள்ளிகளின் பெயர் பட்டியல்

//ஒம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
சார்ந்த அரசு / அரசுஉதவி பெறும் / நகராட்சி / மேல்நிலைப்பள்ளி
தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.